Registered as a Newspaper

54 2 ௨

Modern Brighton
Science Academy
Vaddukoddai.

சனி, ஞாயிறு வகுப்புகள்
year 9, 10, 11
விஞ்ஞானம்
J. R. குரி
கணிதம்
தளையரட்ணம்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

Modern Brighton
Science Academy
Vaddukoddai.
A/L 89
CHEMISTRY
J. S. R. மக்ஸி
ஆரம்பம்; 27-06-88
3-00 p. m (Mon)
வெப்ப இரசாயனம்:
Mon, Wed 3-00 p.m.
அசேதன் இரசாயனம்:
Mon, Wed 4-00 p. m.
தூய. பிரயோக கணிதம்
MR. தாஸ்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞல ஆனி மீ 10 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 09 ( 24 - 06 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 114

ஒப்படைக்க விருப்பம் தெரிவித்த பின்னர்

# ஆயுதக் களைவு அர்த்தமற்ற செயல்

## இந்தியா - விடுதலைப் புலிகள் ஒப்பந்தம் உடன் தேவை என்று ராஜீவிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 24

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஆயுதக் களைவும் ஓர் அம்சமாகும் என்பது உண்மையே.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க விருப்பம் தெரிவித்துவிட்டனர். அதன் பின்னர் ஆயுதக்களைவு மேற்கொள்வது என்பது அர்த்தமற்றது.

இன்றைய நிலையில் அமைதியை ஏற்படுத்த இந்தியா - விடுதலைப் புலிகள் ஒப்பந்தம் ஒன்று முற்தேவையாகும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு, பருத்தித்துறை புனர்நிர்மாணக் குழு அனுப்பிய மகஜரில் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

பருத்தித்துறை புனர் நிர்மாணக்குழு இம் மாதம் 14 ஆம் திகதியிட்டு இலங்கையில் அமைதியை உருவாக்குவது சம்பந்தமாக நீண்ட மகஜர் ஒன்றை பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்தது.

நிர்மாணக் குழுவின் சார்பில் அதன் செயலாளர் திரு. ஆ தேவராஜன் ஒப்பமிட்டு அனுப்பிய அந்த மகஜரின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஒரு சாராருக்குச் சலுகை காட்டவும் மற்றவர் மீது கடும் போக்குக் கடைப்பிடிக்கவும் வகை செய்யவில்லை.

தமிழ் மக்களின் நலன்களை கவனிப்பது சம்பந்தமான மிக முக்கியமான விடயங்கள் — தீர்க்கப்படாதவிடயங்கள்—கால எல்லை இல்லாமல் ஒத்திப் போடப்பட்டு வருகின்றன.

ஆயுதங்களைக் களைவதும் ஒப்பந்தத்தின் ஓர் அம்சமாகும். ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு மறுப்புத் தெரிவித்தால் மட்டுமே ஆயுதக் களைவு அவசியப்படும். தீர்க்கப்படாத ''மிகுதிப் பிரச்சினைகள்'' குறித்தும்: தமிழர்களின் அபிலாஷைகள் சம்பந்தமான ஏனைய விடயங்கள் குறித்தும் முழு அளவில் பேச்சு வார்த்தை நடத்தியபின் ஆயுதங்களை ஒப்படைக்க விருப்பம் கொண்டுள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள்புலப்படுத்தியுள்ளனர்.

நிர்வாக செயல்முறைகள் மூலம் இலங்கை—இந்திய ஒப்பந்தமே பலவீன முற்றிருக்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியா கடும்போக்கைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஹெலிமூலம் கொண்டுவரப்பட்டு

## இந்திய துருப்புகள் காடுகளில் குவிப்பு

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

ஒட்டுசுட்டான், ஜூன் 24

முல்லைத்தீவுப் பகுதியில் ஆயிரக்கணக்கான இந்தியத் துருப்புக்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொண்டு வந்து காடுகளுக்குள் குவிக்கப்படுகின்றன.

முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள பரந்த காடுகளுக்குள் போராளிகள் மறைந்து இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்துவதற்காகவே துருப்புக்கள் குவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

அதுமட்டுமன்றி முல்லைத்தீவுப் பகுதி முகாம்களுக்கும் கூடுதல் படையினர் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் ஒட்டுசுட்டானில் தனியார் ஆலைகளிலும் அமைதிப்படையினர் முகாமிட்டுள்ளனர். (ஒ-113)

## துருக்கியில் நிலச்சரிவு: 300 பேர் புதையுண்டு பலி!

அங்காரா, ஜூன் 24

துருக்கியின் வட கிழக்குப் பகுதிக் கிராமமான மேக்காவில் நேற்று இடம்பெற்ற நிலச்சரிவில் முன்னூறுக்கும் மேலானோர் உயிரிழந்தனர்.

முன்னர் ஏற்பட்ட நிலச்சரிவில் சேதமடைந்த வீதி திருத்தப்பட்ட பின்னர் அதனை மீண்டும் போக்குவரத்துக்கு திறக்கப்படும் வைபவம் நடைபெறவிருந்தது.

அதில் கலந்துகொள்ள ஏராளமானோர் குழுமியிருந்தனர். அச்சமயம் திடீரென்று நிலச்சரிவு ஏற்பட்டு மக்களை மூடியது. கார்கள், கடைகள் எல்லாம் புதையுண்டு போயின என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ - எ)

விசேட ஜி. சீ. ஈ. பரீட்சை:

## பரீட்சார்த்திகளுக்கான பிரவேசக் கார்ட்டுகள் அனுப்பப்பட்டுவிட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 24

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதர விசேட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரவேசக் கார்ட்டுகள் அனுப்பப்பட்டுள்ளன.

சடந்த வருடம் நடைபெறுமல் தடைப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பர்ட்சை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதியிலிருந்து 9-ஆம் திகதி வரை விசேட பரீட்சையாக நடைபெறவுள்ளது இப்பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான பிரவேசக் கார்ட்டுகள் கடந்த திங்கட்கிழமை யாழ் கல்வித் திணைக்களத்தை வந்தடைந்தன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பிரவேசக் கார்ட்டுகள், அவர்களது சொந்த முகவரிகளுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான பிரவேசக் கார்ட்டுகள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதுவரையும் தமது பாடசாலை பரீட்சார்த்திகளுக்குரிய பிரவேசக் கார்ட்டுகளைப் பெற்றுக்கொள்ளாத அதிபர்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் வந்து பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## அனுமதியும் அழைப்பும்

வேலணை, ஜூன் 24

கொடியேற்ற விழா, தேர்த்திருவிழா, புதுமனை புகுவிழா, திருமணவிழா, போன்ற வைபவங்களை நடத்தும் போது தங்களிடம் அனுமதி பெற்று நடத்துமாறு அமைதிப்படையினர் அறிவித்துள்ளனர்.

கோவில் கொடியேற்ற விழா, தேர்த்திருவிழா ஆகியவற்றுக்கு தங்களை அழைக்குமாறும் இந்திய அமைதிப் படையினர் வேலணைப் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளார்கள். (ஒ-167)

## முல்லைத்தீவில் அன்னையர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணியினர் இன்று வெள்ளிக்கிழமை அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த உள்ளனர்.

உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

24 - 06 - 1988
ஆனி - 10
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
05.55 முதல் 06.25வரை
ராகுகாலம்:
10.25 முதல் 11.55வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

மூன்றும் கட்ட

## அடகு நகை விநியோகம் அடுத்த மாதத்தில்!

யாழ்ப்பாணம் ஜூன் 24

அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளளிக்கும் வேலைகளில் மூன்றும் கட்டம், யாழ்ப்பாணக் குடாநாட்டில் அடுத்த மாதம் நடைபெறும்.

சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, பளை ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகளை அடகு வைத்தோருக்கே இந்த மூன்றும் கட்ட விநியோகத்தின்போது நகைகள் மீளளிக்கப்படஉள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை, மக்கள் வங்கி நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

அடுத்த மாத முற்பகுதியில் இவற்றுக்கான நகைகள் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ - 10)

## முச்சந்தி முரளி



பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்டதை துருக்கியிலை இயற்கையும் காட்டி விட்டுது பார்த்தியளோ.

## தென்மராட்சியில் நேற்று ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜூன் 24

தென்மராட்சி பகுதியில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய பகுதிகளில் கடைகள் திறக்கப்படவில்லை. பாடசாலைகள், வங்கிகள் உட்பட அனைத்து அரச அலுவலகங்களும் மூடப்பட்டே இருந்தன.

அண்மையில் சுற்றிவளைப்பு ஒன்றின்போது உயிர்நீத்த விடுதலைப் புலிகளின் தென்மராட்சி பொறுப்பாளர் நகுலனின் 30ஆம் நாள் நினைவை ஒட்டியே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தாலின் காரணமாக நேற்று சாவகச்சேரி, பளை பகுதிகளிலிருந்து வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை,

ஆயினும், கண்டிவீதியூடாக வெளிமாவட்ட வாகனப் போக்குவரத்துகள் வழமைபோல் நடைபெற்றன. (ஒ-9)

2 நாட்களுக்கு

## பொன்னாலைப் பாலம் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 24

திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக யாழ் - காரைநகர் வீதியில் உள்ள பொன்னாலைப் பாலம் இரு நாட்களுக்கு மூடப்பட உள்ளது.

மேற்படி பாலம் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையுமே மூடப்பட்டிருக்கும்.

இவ்விரு நாட்களும் காரைநகருக்குப் பயணம் மேற்கொள்வோர் பண்ணை ஊடாக ஊர்காவற்றுறை சென்று அங்கிருந்து வள்ளம் மூலமே பயணம் செய்ய முடியும் (ஒ - 9)

## மோதல்

கொழும்பு ஜூன் 24

வவுனியா காட்டுப்பகுதியிலும், விசுவமடு, துணுக்காய் காட்டுப் பகுதிகளிலும் இந்திய அமைதிப் படையினர் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொண்டதாக அறியப்படுகிறது.

அமைதிப்படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் நடைபெற்றதாகவும்—

காட்டுப் பகுதியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பண்டாரவளையில் நேற்று

## குண்டு வீச்சு பொலீஸ் அதிகாரி வீடுமீது நான்கு பேர் உயிரிழப்பு!!

கொழும்பு, ஜூன் 24

பண்டாரவளையில் பொலீஸ் அதிகாரி ஒருவரின் வீட்டின் மீது குண்டுகள் வீசப்பட்டதில் நான்கு பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

குண்டு வீசப்பட்ட சமயம் அந்தப் பொலீஸ் அதிகாரி வீட்டில் இருக்கவில்லை.

இம்மாத ஆரம்பத்தில் ஜே. வி. பி. தீவிரவாதி ஒருவரை இப் பொலீஸ் அதிகாரி கைது செய்திருந்தாராம்.

அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது. (ஒ-எ)

## அமெரிக்காவில் ஈழத்தமிழர் மாநாடு

நியூயோர்க், ஜூன் 23

ஈழத் தமிழருக்கு ஆதரவாக எதிர்வரும் 2ஆம், 3 ஆம் திகதிகளில் நியூயோர்க்கில் மாநாடு நடைபெற இருக்கிறது.

மாநாட்டுக்கான ஏற்பாடுகளை அமெரிக்காவிலுள்ள ஈழத்தமிழர் சங்கத் தலைவர் திரு. பஞ்சாட்சரம் செய்து வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் பதினொரு நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வர்.

இந்த மாநாட்டுக்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராக ஜனதா கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணிய சுவாமி கலந்து கொள்வார். (ஒ - 4)

## தமிழ்நாட்டு மீனவர் 18 பேரைக்காணவில்லை

### மண்டைதீவில் ஒதுங்கியுள்ளனரா?

யாழ்ப்பாணம் ஜூன் 24

தமிழ் நாட்டிலிருந்து இரு வள்ளங்களில் மீன் பிடிப்பதற்குப் புறப்பட்டுச் சென்ற 18 மீனவர்களைத் காணவில்லை என அறிவிக்கப்படுகிறது.

இவர்கள்மண்டைதீவு, மணியந்தோட்டம் பகுதிகளில் கரையை அடைந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இதனிடையில் காணமற் போனவர்களைக் கண்டு பிடித்துத் தரும்படி அவசர தந்தி ஒன்றை தமிழ் நாட்டிலுள்ள வேல்கோட்டு மீனவர் சங்கத் தலைவர் யாழ் அரச அதிபருக்கு அனுப்பியுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அனுராவின் அச்சம் போக்கும் அமைச்சர் அத்துலத் முதலி!

கொழும்பு, ஜூன் 24

தற்போதையமாகாண சபைச் சட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைக்க முடியாது. ஆகவே நிரந்தர இணைப்பு வரும் என்று அச்சப்பட வேண்டியதில்லை.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத் முதலி நாடாளுமன்றத்தில்பேசுகையில்முன் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைக்க அரசு ஒத்துக்கொண்டு விட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றுஎதிர்க்கட்சித்தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் அத்துலத் முதலி முன் கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

மாகாணசபைச் சட்டத்தின் 37 ஆவது சரத்துப்படி சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

ஆயுதங்கள் ஒப்படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார்ப் பகுதியிலும் அலுவலகங்கள் இயங்கவில்லை

வவுனியா, ஜூன் 24

கடந்த திங்கட்கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு மன்னாரில் கச்சேரி, வங்கிகள் மற்றும் அரச அலுவலகங்கள் இயங்கக்கூடாது என்று தமிழீழவிடுதலைப்புலிகள் அறிவித்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் சிவில்நிர்வாகசீர்குலைப்பு நடவடிக்கையின் ஓர் அம்சமாகவே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகால வரையிலும் எதுவித தடையுமின்றி மன்னாரில் சிவில் நிர்வாகம் இயங்கி வந்தது. அங்கு சிவில் நிர்வாகத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

இதேவேளையில் வவுனியா மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகளைக் கவனிப்பதற்கு என்று புனர் வாழ்வுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான T.V றேடியோ, பூஸ்டர் அன்ரனு வயர் சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், ரைசுகுக்கர் மின் அடுப்புகள், T.V ஸ்ராண்ட் ... குக்கர் மற்றும் ... வயறிங் பொருட்கள் பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road, Jaffna (C5482)

புதிய நவீன வீட்டுப் பாவனைக்குரிய சலவை இயந்திரம் General Washing Machine விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு No. 16, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 4703

Honda C. 90 Super Cub உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 98 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4530

புதிய மறு சீரமைக்கப்பட்ட புதிய மொடல் C. 90 விற்பனைக்கு உண்டு. இடம்: 15 பாரதி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 4531

(Cevelion) சிவிலியன் பஸ் முழுமையாக அல்லது உதிரிப்பாகமாக இரண்டு இஞ்ஜின்கள் கழட்டிய நிலையில் விற்கப்படும். தொடர்பு: 32/4 நிக்கிலஸ் லேன், கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம். 4522

எனது மகளுக்கு நிந்தமும் ஆட்சியுமான நெடுந்தீவு கிழக்கு பெரிய மெச்சன் வளவு 40 பரப்பு தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு இருக்கிறது. விரும்புவோர் 39/5 இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 4507

4 ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள நல்ல நிலையில் ஒரே பாவனையில் பாவிக்கப்பட்ட மொறிஸ் மினி றவலர் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு R. விஜயன், விஜய வாசா, உரும்பிராய். 4707

யாழ்-கச்சேரி நல்லூர் நாவலர் வீதி சந்திக் கருகாமையில் உள்ள 198ம் இல. வீடும் காணியும் (3 பரப்பு) உடன் விற்பனைக்குண்டு. மின்சார தண்ணீர் வசதியுண்டு. விபரங்களுக்கு: J. S. T. ... சபை, பெற்றோலியம் கூட்டுத் தாபனம் யாழ்ப்பாணம். அல்லது உபதபால் நிலயம் அருகில் சங்குவேலி. 4516

## கோழிக்குஞ்சு

எல்லா இன கோழிக் குஞ்சுகள் 28ம் திகதி செவ்வாய் 1ம் திகதி வெள்ளிக் கிழமைகளில் விநியோகிக்கப்படும் உடன் பதிவு செய்க விவேத் ஏஜென்சி 37/4 ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம். (மஸ்கன் நிறுவனத்துக்கு அருகில்). 4700

Hisex Golden பிறவுன் சேவற் குஞ்சுகள் 24ந் திகதி வெள்ளிக்கிழமையும் 1மாத Golden comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் 25ந் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி கொக்குவில். (4697)

### இறைச்சிக் கோழி விநியோகம்

புரொயிலர் சேவல் இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். "பேப்பர் கடை" (1ம் ரெயில்வே கடவைக்கு அருகில்) 66/2 பருத்தித் துறைவீதி, யாழ்ப்பாணம். 4702

### காணி விற்பனை

பெ. நா ... பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு என்ற முகவரியிலுள்ள காணியின் கிழக்குப் புறமாக 6 பரப்பு விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: நா. சரஸ்வதி அம்மாள், 120, ... வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (4693)

உரும்பராய் சந்தியிலிருந்து 50 யார் தூரத்தில் ... றப்பாய் றோட்டில் கடை கட்டக்கூடிய காணி ஒன்று (2½ பரப்பு) விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும். K. சதானந்தம். C/o குணம் வீடியோ சென்றர், 42 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4692)

சங்கத்தானை புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் றோட்டோரமாக 4 நாலு பரப்பு நல்ல தண்ணீர்க் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்ட தொழிற்சாலை அமைக்க வசதியானது. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி. 4696

சுந்தரோடை றோட்டில் சுண்ணாகச் சந்தியிலிருந்து 1/4 மைல் தூரத்திற்குள் வீடு கட்டக்கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: த. தம்பிப்பிள்ளை அரவிந்தம் சேர் P. இராமநாதன் றோட் உடுவில், சுண்ணாகம். 4705

## தேவை

நாவலர்நகர் பலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்திற்கு பூசை செய்வதற்கு ஓர் அனுபவம் வாய்ந்த குருக்கள் தேவை. மாத வேதனமாக ரூ. 1000 சம்பளமாக கொடுக்கப்படும். இருப்பிட வசதியும் கோவில் வரும்படியும் உண்டு. தொடர்பு கொள்ளவும்: ஆ. ச. ஆறுமுகம். (4689)

இரண்டு பேர் உள்ள ஒரு குடும்பத்திற்கு திருநெல்வேலியில் ஒரு பகுதி வீடு (Anex) அல்லது சிறிய வீடு உடன் தேவை. தொடர்பு: C/o 245, உதயன், யாழ்ப்பாணம். (4694)

1. 80 ஸ்ரீ இலக்கத்திற்கு பின் நல்ல நிலையில் உள்ள வெஸ்பா (Vespa) ஸ்கூட்டர் 2. நல்ல நிலையான மொறிஸ் மறினா (Morris Marina) அல்லது போட் எஸ்கோட் (Ford Escort) கார் தேவை தொடர்பு. J.P.T Ltd 3 மொடல் மார்க்கட் (மேல்மாடி) யாழ்ப்பாணம். (4695)

(Broiler) புரொயிலர் கோழிகள் தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இடம் அண்ணா பம் இணுவில். (C5501)

சிலிண்டர், பிளேட்டின் மெஷின் மைண்டர்கள் தேவை: நேரில் வரவும் செட்டியார் அச்சகம், 430 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (C 5506)

பேக்கரி வேலை தெரிந்த வேலையாட்கள் தேவை. தொடர்பு: சுதா பேக்கரி, கொக்குவில் மேற்கு. (4704)

### வீட்டுப்பணிப்பெண் தேவை

நன்றாக வேலை செய்யக்கூடிய 15ற்கும் 30 வயதுக்கு மிடப்பட்ட பணிப்பெண் தேவை. தங்கு மிடவசதியுண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்: செ. நடனசபாபதி இல: 32, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (4698)

### மணமகன் தேவை

இந்து உயர் வேளாளகுல 40 வயதுடைய (சட்டத்தரணி), மணப்பெண்ணுக்கு பட்டதாரி அல்லது அதற்குச் சமமான கல்வித் தகுதி உடைய மணமகன் தேவை: நல்ல சீதனம் வழங்கப்படும் புகைப்படம் சாதகம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/o 167, உதயன். (4521)

### மடுத்திருப்பதி யாத்திரை

காவலூர் புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ் [கருவில் வீதி], நிர்வாகிகளால் தனிப்பட்டவர்களுக்கான மடு யாத்திரை ஆனி மாதம் 29ம் திகதி பிரயாணத்துக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. ஆகவே விரும்பியவர்கள் ஒருகிழமைக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்: நிர்வாகி ... காவலூர். (4699)

### FOR SALE

Type writers—Brand new English Portable Typewriters available with one year Guarantee Fudo Enterprises 39/17, Power House Road, 3rd Lane Jaffna. (4706)

## விற்பனைக்கு

பழைய செம்புபித்தளை அலுமினியம் உயர் விலைக்கு பெறப்படும். பின்லையார் 250, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (4674)

### SALE

English Standard Type-writer 18 inch carriage. Contact Thamaratnam 12, New Road Athiady Jaffna. (4690)

## TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## கலர்படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிரோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள. கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (C/4910)

## விவசாயப் பயிற்சி

மண்டைதீவு ஜூன் 24 திருநெல்வேலி சிறுவர் நிறைவாழ்வு இல்ல விடுதி மாணவர்கள் எதிர்காலத்தில் விவசாயத்தில் தேர்ச்சியும் ... பெறும் ... விவசாயப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

உப உணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இல்ல விடுதியில் தினமும் மாலை நேரங்களில் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. (இ-88)

## கொள்ளை

சாவகச்சேரி, ஜூன் 24 கல்வயல் கிராமத்தில் வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் மின் விளக்குகளை செயல் இழக்கச் செய்துவிட்டு தங்கநகைகள், பணம், மணிக்கூடுகள் முதலியவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

... அண்மையில் இந்த வீட்டில் வைபவம் ஒன்று நடைபெற்றது.

... பணம் வீட்டில் இருப்பது தெரிந்தே இக்கோஷ்டி கொள்ளையை நடத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. (இ-13)

## வகுப்பு

ICMA/ AAT I. A. B / Computer Programing வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன, School of Business Administration 16, 2ம் குறுக்குத் தெரு, [O.L.R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம் யாழ்ப்பாணம். (C5468)

# ★ தொழிற் பயிற்சி ★



- COMPUTER PROGRAMMING [Basic Cobol]
- றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டேக் றிப்பயறிங்
- எலெக்றிக்கல் வயறிங்
- றீவைண்டிங்
- ENGINEERING DRAWING

சகல பயிற்சிகளும் குறைந்த காலத்தில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன.

ஆரம்பம்: 25 - 06 - 88 / 27 - 06 - 88

**Jaffna Technical Institute**

Stanley Road, JAFFNA. (C-5526)

---

வல்வெட்டித்துறை
திரு. சி. வெ. சிவசுப்பிரமணியம்
அவர்களின்
## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



புவியில் தோற்றம்: 12 - 7 - 1913 தெய்வத்துள் சங்கமம் 25 - 5 - 1988

வான்புகழும் வள்ளுவனின் வாய்சொன்ன சொற்படியே
தான் ,கழாய் வாழ்ந்தார் தரணியிலே - தேன்சொரியும்
வல்வெட்டித்துறையூரில் வாழ்ந்திட்ட வள்ளலிவர்
நல் நாயகர் தானே.
வெங்கொடுமைச் சாக்காட்டின் வேதனையால் துடிதுடித்த
எங்கொடுமை தமைக்கண்டு இரக்கமுடன் ஓடிவந்து
பங்குகொண்டு பரிதவித்து, பணிகள் பல செய்தவர்க்கும்
பொங்கிவரும் பேருணர்வால், புகழ்கின்றோம் பெருநன்றி

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி.
வல்வெட்டித்துறை,
ராஜா ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்.
24-6-88 (4536)

## 2ஆவது நினைவஞ்சலி



திரு. க. தில்லையம்பலர்

பிறப்பு 18-7-1933 இறப்பு 17-6-1986

திதி 24- 6- 1988

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடராய், பண்பின் நிறைவாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து எமக்கெல்லாம் நல்வழி காட்டிய அன்புத்தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எமது இதயத்தை விட்டு என்றென்றும் பிரியாது நிற்கும். தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள் சகோதரர்கள்

T. சிவகுமார்
"குமரபவனம்"
நவாலி அரசடி
மானிப்பாய். (4824)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

கிளீனேர்ஸ் — 350+100 SR
காப்பென்ரர் — 600+100 SR
மேசன் — 600+100 SR
மெக்கானிக் — 600+100 SR

**முற்பணம் அறவிடப்படமாட்டாது**

● பிரயாணம் மேற்கொள்ள எம்மிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள், விசா வந்து எம்மால் குறிப்பிடும் திகதியில் பிரயாணத்தை மேற்கொள்ளாவிடின் கடவுச்சீட்டு திருப்பி ஒப்படைக்கப் படமாட்டாது.

நம்பிக்கையுடன் பிரயாணம் செய்ய இன்றே தொடர்பு கொள்க:

தலைமையகம்:

**கோல்டன்ரவல்ஸ் &ரூர்ஸ்**
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

கிளைகள்:
[1]
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
மயிலங்காடு, ஏழாலை.

[2]
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
நாவலர் சனசமூக நிலைய அருகில்
உடுப்பிட்டி,
[24 ஆம் திகதி முதல் இயங்கும்]
[C-4948]



## நாக துர்க்கா தேவி ரவலஸ்

மக்களின் நலன் கருதி மங்களகரமான
ஆரம்பவிழா
சாவகச்சேரி - முன்னாள் பொலிஸ்
நிலையத்துக்கு முன்பாக
**K. S. மஜகலிங்கம்**
(பாண்டியன்)
சாவகச்சேரி.
(4830)


## வருடாந்தப் பொதுக் கூட்டம்

காங்கேசன்துறை வடக்கு, காங்கேசன் துறை தெற்கு கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய காங்கேசன்துறை பிரஜைகள் குழுவின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் 25-06-1988 சனிக்கிழமை மாலை 3 . 00 மணிக்கு தலைவர் திரு. எஸ். குமரகுரு தலைமையில் நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செ. பாலசுந்தரம்
(செயலாளர்)
(காங்கேசன்துறை பிரஜைகள் குழு)
(4821)

## உளநல ஆலோசகர்களுக்கான பயிற்சி நெறி

### (A Course for Mental Health Counsellors)

மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறி இரு பிரிவுகளாக (தமிழ், ஆங்கிலம்) எதிர்வரும் ஆவணி மாதம் யாழ்ப்பாணத்தில் இலவசமாக நடாத்தப்படும். உள்நாட்டு, வெளிநாட்டு விரிவுரையாளர்களினால் நடாத்தப் படவிருக்கும் இப்பயிற்சி நெறிக்கு முப்பத்தாறு(36)பேர் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் 25-60 வயதிற்கு இடைப்பட்டவர்களாயும் சமூகசேவையில் ஆர்வமுடையவர்களாகவும் இருத்தல் அவசியம். பயிற்சியின் பின்னர் இவர்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ள உளநல ஆலோசனை நிலையத்தில் வாரத்தில் சில மணித்தியாலங்கள் தொண்டு அடிப்படையில் கடமையாற்றுவார்கள். விண்ணப்பங்கள் கல்வித் தராதரம் மற்றும் விபரங்களுடன் (Bio-Data) ஆடிமாதம் 10ம் திகதிக்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பயிற்சி செயலாளர்
நற்சமூக நடுநிலையம்
இல. 115, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(4815)

# வடமராட்சி கிழக்கில் மாணவர்களின் கல்வி பாதிப்பு

வடமராட்சி ஜூன் 24 சமீபத்திய சம்பவங்களை அடுத்து வடமராட்சி கிழக்கில் மாணவரின் கல்வி பெரும் அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்கள் வரவு குறைவாக இருப்பதாகவும் கல்வி அதிகாரிகள் அங்குசெல்வதும் குறைவு என்று பெற்றோர்கள் புகார் செய்துள்ளனர்.

பெரும்பாலான ஆசிரியர்கள் வடமராட்சி கிழக்குக்கு வெளியே இருந்தே தினமும் அங்கு செல்கின்றனர்.

தினமும் நடைபெறும் திடீர் திடீர்சோதனைகள் காரணமாகவும், போக்குவரத்துச் சீர்கேடுகள் காரணமாகவும் பெரும்பாலான ஆசிரியர்கள் தாமதித்தே பாடசாலை செல்கிறார்களாம்.

இளம் ஆசிரியைகள் அங்கு கடமையாற்ற தயக்கம் காட்டுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

(இ-160)

## வடமராட்சியில் தண்ணீர்ப் பந்தல்கள்

வடமராட்சியின் பல பாகங்களிலும் வீதி ஓரங்களில் தண்ணீர்ப்பந்தல்கள் தோன்றியுள்ளன.

பொதுமக்களின் தாகம் தீர்ப்பதே இதன் நோக்கம் ஆகும்.

பந்தல்களில் தண்ணீர்ப் பானைகளும் குடிக்க உதவும் பாத்திரங்களும் வைக்கப்பட்டுள்ளன. (இ-160)

## வகுப்புகள்

வடகோவை இளைஞர் கழகத்தினால் வாய்ப்பாட்டுமிருதங்க வகுப்புகள், நடன வகுப்புகள் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

(இ-72)

வடஇலங்கை

## ஹோமியோபதிச் சங்க உபகுழு கொழும்பில் அதிகாரிகளைச் சந்தித்தது

மானிப்பாய் ஜூன் 24 வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தின் உபகுழு ஒன்று அண்மையில் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் திரு. பீ. பி.வெரகொட, திரு. டி. எம். தர்மதிலக ஆகியோரை சந்தித்து இலங்கை ஹோமியோபதி கவுன்சிலால் நீண்டகாலமாகத் தீர்த்துவைக்கப்படாத பலவிடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடியது.

இந்த உப குழுவில் வடஇலங்கை ஹோமியோபதி சங்கத் தலைவர் டாக்டர் அ. கிருஷ்ணசாமி, உபதலைவர் டாக்டர் எஸ். ரி. புவிராசன், செயலாளர் திரு. ம. வேலுப்பிள்ளை, உபசெயலாளர் டாக்டர் தி. பூரணேஸ்வரன், பொருளாளர் டாக்டர் எஸ். சிவநேசன் ஆகியோர் அடங்கி இருந்தனர்.

ஹோமியோபதி சங்கத்தின் உறுப்பினர்களான பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி தொழிலுனர் சார்பாக ஹோமியோபதி மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு ஹோமியோபதி சங்கத்துக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

10 ஆண்டுகளுக்கு மேலாக ஹோமியோபதி தொழிலுனர்களாக கடமையாற்றிய சகலரையும் [illegible]முகப் பரீட்சை மூலம் கவுன்சிலின் நிரந்தரப் பதிவேட்டில் பதிவு செய்யவும் அத் தொழிலுனர்கள் தற்காலிகபதிவேட்டில் பதிவு பெற்றிருப்பின் அவர்களின் விருப்பின் பேரில் அவர்களையும் இப்பதிவேட்டில் பதிவு செய்யவும் அனுமதிக்கவேண்டும்.

முன்னைய சந்தர்ப்பத்தில் தொழிலுனராக பதிவு செய்யத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

முழுநேர ஹோமியோபதி கல்லூரி ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி உபகுழுவினர் கேட்டுக் கொண்டனர்.

(இ-90)

## பனை வளம் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்

பருத்தித்துறை,ஜூன்24 பனைவளத்தை முழுமையாகப் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதுடன் நாட்டின் அபிவிருத்தியையும் மேம்படுத்தவேண்டும்.

இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் வடமராட்சிப் பிராந்திய அலுவலகத்தையும் தொழிற் பயிற்சி நிலையத்தையும் கற்பகம் கொள்வனவு விற்பனவு நிலையத்தையும் திறந்து வைத்து உரையாற்றிய இலங்கை பனம்பொருள் அபிவிருத்தி சபைப் பணிப்பாளர் சிவதர்ம வள்ளல் கனகராசா மேற்கண்டவாறு கூறினார்.

அல்வாய் மாலுசந்தியில் நடைபெற்ற இத் திறப்பு விழாவுக்கு இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச்சபை வடமராட்சி பிராந்திய அலுவலக பொறுப்பதிகாரி திரு. வி. ஜி. தங்கவேல் தலைமை வகித்தார்.

திரு. கனகராசா மேலும் கூறியதாவது:-

''பனைவளம் எமது வாழ்க்கைக்கு பல்வேறு வழிகளிலும் பயன்படுகிறது. அதுமாத்திரமல்ல வெளிநாடுகளிலும் பனைவள உற்பத்திப் பொருட்களுக்கு அதிக கிராக்கியும் மதிப்புத் இருக்கின்றது.

எனவே பனைமூலவள உற்பத்திகளை அபிவிருத்திசெய்வதுடன் நாமும் உள்ளூர் உற்பத்திகளான பனைவள உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். வெளிநாட்டுப் பொருட்களின் மோகத்தை நாம் நீக்கிவிடவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் திரு. எஸ் பாலசிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார் வடமராட்சி பிராந்திய அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. வீ. ஜி. தங்கவேல் இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் திரு.எஸ். மாணிக்கம்; இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. பொன்.மாணிக்கவாசகர் பருத்தித்துறை புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கே. சிவப்பிரகாசம், பனை வளப்போர் அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. ஏ. என். எஸ் திருச்செல்வம், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க உப தலைவர் திரு. எஸ். சதானந்தன் உட்பட பலர் உரையாற்றினர்.

(இ-118)


## கொம்பியூட்டர் பயிற்சி

யாழ்நகரில்!!
**Diploma in Computer Programming in BASIC & COBOL COURSE.**
புதிய 2ஆம் பிரிவுகள் ஆரம்பம்:
25- 06- 88 (9.30 WeekEnd Batch) SAT & SUN
27- 06- 88 (9.30 Week Day Batch) MON & FRI

★ கூடிய நேரச் செய்முறைப் பயிற்சி IBM - PC SUPER / XT Computer உட்பட பல Computer களில் வழங்கப்படும்.
★ File Handing Project Work அடங்கலாக பல வேலைகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
★ சலுகைத் தவணைக் கட்டணம் Rs 400/- மட்டுமே.

Administrative Branch
**IDP**
**INSTITUTE OF DATA PROCESSING**
342, K. K. S Road (சிவன்கோவிலடி)
யாழ்ப்பாணம்

குறிப்பு: தெல்லிப்பளை கிளையில் 25-06-88 (12.30 pm)
அலுவலகர்களுக்காகவும், பல்கலைக்கழக மாணவர்களுக்காகவும் Week end சிறப்பு பிரிவு ஆரம்பமாகிறது. (C4932)



## குதூகலத் திறப்புவிழா

கோல்டன் ரவல்ஸ்! கோல்டன் ரவல்ஸ்!!

வல்வெட்டித்துறை, வல்வெட்டி உடுப்பிட்டி, கெருடாவில், தொண்டமானாறு, நெல்லியடி, கரவெட்டி, அல்வாய் மக்களின் வசதிக்கேற்ப எமது கிளைஸ்தாபனம் உடுப்பிட்டி சந்திக்கருகாமையில் (நாவலர் சனசமூகநிலையத்திற்கு அருகாமையில்) வெள்ளிக்கிழமை 24- 06- 88 காலை திறந்து வைக்கப்படும்.

நம்பிக்கையுடன் துரிதகதிப் பிரயாணம் செய்ய உடன் தொடர்பு கொள்க

**கோல்டன் ரவல்ஸுடன்**

(C 4947)


உ

## திருமண அழைப்பிதழ்

காலம் : விபவ வருடம் ஆனித்திங்கள் 11 ஆம் நாள் (25-06-1988) சனிக்கிழமை
மணவாளக்கோலம்: மணமகன் இல்லம் காலை 9-00மணி — 10-00மணி வரை
திருமாங்கல்யம் தரித்தல்: மணமகள் இல்லம் 11-31 மணிமுதல் 1-07 மணி வரை

| மணமகன் | மணமகள் |
| --- | --- |
| **கணபதிப்பிள்ளை (கணேஸ்)** | **பரமேஸ்வரநாயகி (சந்திரா)** |
| (பண்டாரவன்னியன் மில் உரிமையாளர்) | (B.A. ஆசிரியை சாகிராக் கல்லூரி) |
| ஒட்டுசுட்டான் | புத்தளம் |

திருவருள் நிலைகொண்டு திருமாங்கல்யதாரணம் இனிது நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள்குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவை விரும்பும்

| | |
| --- | --- |
| திரு. நாகப்பர் அம்பலவாணரும் துணைவியாரும் | திரு. இராமலிங்கம் வேலுப்பிள்ளை |
| (யாழ் பேக்கறி வலதுகரை) | (இளைப்பாறிய அதிபர்) |
| முத்தையன்கட்டு. | நெடுந்தீவு |
| [illegible] | இருபாலை வீதி, |
| | கொண்டாவில் கிழக்கு |
| | கோண்டாவில். |

(4328)

## பிறந்ததின வாழ்த்து



செல்வி தர்சியா பாலசுப்பிரமணியம்
(24- 06- 1988)

இணுவில் தெற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் காந்திமதி தம்பதிகளின் செல்வப் புதல்வி தர்சியா தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் அருளால் சகல கலைகளையும் கற்று சகலகலாவல்லியாக பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ அப்பா, அம்மா, அப்பப்பா அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், மச்சான்மார், ரமா, கோகிலன், தம்பி நீதேசன் லிங்கம் ஸ்ரோர்ஸ் ஊழியர்கள் ஆகியோர் இவரை வாழ்த்துகிறார்கள்.

க. பாலசுப்பிரமணியம்
லிங்கம் ஸ்ரோர்ஸ்,
பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி
இணுவில்
(4832)


Pfizer

## அறிவித்தல்

பிகோஸூல்ஸ் காப்ஸூல்ஸ் மருந்துக் கடைகளில் தாராளமாகக் கிடைக்கின்றது. பை(f)ஸர் (Pfizer) பிகோஸூல்ஸ் கறுப்பு ஒரேஞ்சு நிறங்களில் ஒவ்வொரு நிறத்தின் மீதும் Pfizer என்ற சொல் காணப்படுகின்றது.

பிகோஸூல்ஸ் சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பகமான தயாரிப்பு. ஆதலால் அதற்குப் பதிலாக அதேபோல் வேறு ஒரு போலித் தயாரிப்பை அறிமுகப்படுத்த முயற்சிக்கப்படலாம். ஆகவே டாக்டர் எழுதிய தயாரிப்பைத்தான் மருந்துக் கடையில் தந்தார்களா என்பதை டாக்டர் தந்த சீட்டுடன் ஒத்துப்பார்க்கும்படி நாம் ஆலோசனை கூறுகிறோம்.

பை(f)ஸர் (Pfizer) பிகோஸூல்ஸ் கப்ஸூல்ஸ் இப்படித்தான் காணப்படுகிறது




கறுப்பு ஒரேஞ்சு

பிகோஸூல்ஸ் காப்ஸூல்ஸ் தயாரித்து விநியோகிக்கும் பை(f)ஸர் நிறுவனம் அதன் தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

**பை(f)ஸர் லிமிட்டெட்**
688, காலி வீதி, இரத்மலானை.

## ANNOUNCEMENT

Becosules Capsules are now freely available with the Chemist. Pfizer Becosules are black and orange in colour and have the word Pfizer on each half of the capsule.

Since Becosules is a well accepted and reliable product, substitution with a similar looking preparation may be attempted. We suggest that you check your Doctor's prescription with the Chemist, in order to ensure that you are dispensed the product that has been prescribed.

"Pfizer" Becosules Capsules will look like the above".

Becosules Capsules are manufactured and distributed by Pfizer, who guarantee its quality.

**Pfizer Limited**
688, Galle Road, Ratmalana.
(C4746)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

வீதி அபிவிருத்தி அதிகார சபை

### யாழ்ப்பாணம் மானிப்பாய் காரை நகர் வீதியில் இல. 13/1. போன் ஞல பாலம் சகல வாகன போக்கு வரத்துகளுக்காக மூடுதல்

மேற்படி பாலத்தில் முக்கியமான திருத்த வேலைகள் மேற்கொள்ள இருப்பதால் இவ் வீதி சகல போக்குவரத்துக்கும் 25-6-88ஆம் திகதி காலை 8-00 மணி தொடக்கம் 26-6-88 இரவு 9-00 மணிவரை மூடப்பட்டிருக்கும் என்பதை இத்தால் சகல பொதுமக்களுக்கும் அறியத் தருவதுடன் இதனல் ஏற்படும் அசௌகரியங்களுக்கும் வருந்துகிறேம்.

த. பாலதேவன்
நிறைவேற்றுப் பொறியியலாளர்
(C 5519) வேலணைப் பகுதி



## கேள்விப் பத்திர விண்ணப்பம்

யாழ்ப்பாணக் கல்லூரி பரந்தன் கிளையில் வகுப்பறைகள், கிணறு, ஆசிரியர் விடுதி ஆகிய கட்டட நிர்மாண வேலைகளைக் கட்டி முடிப்பதற்குத் தகுந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் மு. ப. 9-00இலிருந்து பி. ப. 3-00 வரை கிழமை நாட்களில் ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

— இயக்குனர்

(C 5511)



## நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவரும், கண்டி, மாத்தளை சு. பெ. முருகுப்பிள்ளை அன் சன்ஸ் வர்த்தகத் தாபனங்களின் உரிமையாளரும் ஆகிய காலஞ்சென்ற திரு. சு. பெ. மு. கனகசபாபதி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது வீட்டிலும் பருத்தித்துறை மருத்துவ மனையிலும் யாழ். மருத்துவ மனையிலும் சிகிச்சைக்கும் பராமரிப்புக்கும் சகல உதவிகளும் புரிந்த டாக்டர்கள், ஊழியர்கள், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் மனமுவந்த நன்றி செலுத்துகிறேம். மேலும் 16-6-88 இல் நடைபெற்ற அன்னரின் இறுதிக்கிரியைகளிற் கலந்துகொண்டோர், உதவிகள் புரிந்தோர் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், உடனிருந்து ஆறுதல் அளித்தோர் யாவருக்கும் எம் அன்பான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேம்; தனித்தனியே நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகிறும்.

வியாபாரிமூலை, பருத்தித்துறை.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(C. 5513)



## அந்தியேட்டி அழைப்பு



மு. ஜயகணேசன்

மலர்வு: 14-7-1940 உதிர்வு: 27-5-1988

ஊரிக்காடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மு. ஜயகணேசனினது அந்தியேட்டிக் கிரியைகள் 26-06-88 ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு ஊறணி, வல்வெட்டித்துறையிலும் பின்பு வீட்டுச் சபீண்டிக் கிரியைகள் காலை 11-00 மணிக்கு ஊரிக்காடு வல்வெட்டித்துறையிலும் நடைபெறும்.

உற்ருர், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேம்.

இப்படிக்கு
மனைவி, மக்கள்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. (4523)


வவுனியாவில் போதிய

# மரணவிசாரணை அதிகாரிகள் இல்லாததால் மக்கள் கஷ்டம்

வவுனியா ஜூன் 24

வவுனியாநகரப்பகுதிக்குள் போதிய திடீர் மரண விசாரணை அதிகாரிகள் இல்லாத காரணத்தினல் பொது மக்கள் பல கஷ்டங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் ஆளாகி வருகின்றுர்கள்.

இருபதினுயிரத்துக்கும் மேற்பட்ட குடிசனத்தைக் கொண்ட நகர சபைப் பகுதி மக்களுக்கும் அதனைச் சூழ்ந்துள்ள கிராமப்புற மக்களுக்கும் இரண்டு திடீர் மரண விசாரணை அதிகாரிகள் கடமையாற்றி வந்தார்கள்.

ஆனல் இப்போது ஓர் அதிகாரி மட்டுமே கடமையாற்றி வருகின்ருர் சில வேளைகளில் அவர் வெளியூர் சென்றுவிடுவதால் இப்பகுதிகளில் ஏற்படும் திடீர் மரணங்களை உடனடியாக விசாரித்து தீர்ப்பைப் பதிவு செய்து கொள்ள முடியாமல் பொதுமக்கள் பல கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றுர்கள்.

வெளியிடங்களில் ஏற்படும் அசம்பாவிதங்கள் விபத்துக்களினல் மரணமானவர்களின் சடலங்கள் வவுனியா ஆஸ்பத்திரியின் பிரேத அறைக்கு கொண்டுவரப்படும் பொழுது அவற்றிற்கான மரண விசாரணைகளை மேற்கொள்வதற்கும் இப்பகுதியில் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சேவையே எதிர் பார்க்கப்படுகின்றது.

இவ்வாருன சந்தர்ப்பங்களில் குறிப்பாகக் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக இந்த கஷ்ட நிலைமை நிலவி வருகின்றது.

வவுனியாவில் நீதிமன்றம் இயங்காதுள்ள இந்த நிலைமையில் தற்போது கடமையாற்றி வரும் அதிகாரியும் வெளியூர் சென்றதால் சுமார் 3 மைல்களுக்கு அப்பால் உள்ள ஈரப்பெரிய குளம் பகுதியில் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரியை இத்தேவைக்காகத் தேடிச் செல்ல நேரிடுகிறது.

மேலும் இம்மாதத்தின் முதல் வாரத்தில் பதில் நீதவானும் திடீர் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. ஆர். வி. வில்வராஜா அகால மரணமானதைத் தொடர்ந்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. (இ-164)

## வவுனியாவுக்கும் மதவாச்சிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் ஆயுதக் குழுவினர் தொல்லை

வவுனியா ஜூன் 24

வவுனியாக்குவும் மதவாச்சிக்கும் இடையில் மீண்டும் ஆயுதந் தாங்கிய குழுவினரின் தொல்லைகள் அரம்பித்துள்ளன. இது குறித்து வாகனச் சாரதிகளும் உரிமையாளர்களும் பாதுகாப்புப் பகுதியினருக்கு முறையிட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து சுமார் நாலு அல்லது ஐந்து மைல் தூரத்திற்கு உட்பட்ட பிரதேசத்திலேயே இந்த வாகன வழிமறிப்புச் சம்பவங் இடம் பெறுகின்றன

வாகனத்தைக் காட்டினுள் கடத்திச் சென்ற ஆயுதந்தாங்கியகோஷ்டி அதிலிருந்த 160 மூடை சீனி, கிழங்கு, பேரீச்சம் பழம் போன்ற 2 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை இறக்கிக் கொண்டு லொறியை அனுப்பியதாக அமைதிப்படையினரிடம் முறையிடப்பட்டுள்ளது. (இ-164)

## விபத்தில் மாணவன் மரணம்

வவுனியா, ஜூன் 24

கடந்த சனிக்கிழமை ஓமந்தையிலிருந்து வவுனியா நோக்கி வந்த உழவு இயந்திரம் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளான போது படுகாயமடைந்த வேலுப்பிள்ளை ருகுணகுமார் (14 வயது) என்ற மாணவன் மரணமானுர்.

தாண்டிக்குளத்தில் நிகழ்ந்த இந்த விபத்தில் ருகுணகுமார் படுகாயமடைந்து வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டு, பின்னர் மேற் சிகிச்சைக்காக அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு அவர் மரணமானுர்.

ஓமந்தை மகாவித்தியாலயத்தின் மாணவரான இவருடன் பிரயாணஞ்செய்து காயமடைந்த வேறு மூவரும் சிகிச்சை பெற்று வருகிறுர்கள். (ஒ-164)

## புடைவைக் கடையில் கொள்ளை

காங்கேசன்துறை ஜூன் 24

காங்கேசன்துறையில் உள்ள புடவைக் கடை ஒன்று உடைக்கப்பட்டு பெறுமதியான புடவைகள் திருடப்பட்டுள்ளன.

இது குறித்து காங்கேசன்துறை கிராம சேவையாளரிடமும், காங்கேசன்துறை அமைதிப் படை முகாமிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ (6-8

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 24

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரமும் சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. அ. சிவநாயகமூர்த்தியும் யாழ் இந்துக்கல்லூரி அதிபர் ச. பொன்னம்பலமும் கலந்து கொள்கிருர்கள். (இ-5)

## இன்று மானிப்பாயில்

யாழ்ப்பாணம், ஜூன் 24

மானிப்பாய்வலயப் பாடசாலைகளின் 88 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுநர் போட்டி இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இப்போட்டியில் மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்குவார். (இ-5)

## பருளாய் விநாயகர் பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை, ஜூன் 24

சுழிபுரம் பருளாய் விநாயகர் ஆலயத்தின் நலன்கருதி தற்காலிக பரிபாலனசபை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இச்சபையை அங்கீகரிக்கவும் புனருத்தாரண வேலைகளை மேற்கொள்ளவும் பொதுமக்களின் அங்கீகாரத்தைப்பெறும் பொருட்டும் எதிர்வரும் 25-ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்குப் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறும். (இ-161)

## இல்ல விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 24

யாழ் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறும்.

பிற்பகல்2-30 மணிக்கு ஆரம்பமாகும் போட்டிக்கு முல்லைத்தீவு சிரேஷ்ட கல்வி அதிகாரி திரு. சி. தியாகராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார் [க]

அறிவியல் கட்டுரைகளுடன்

# ஆக்க இலக்கியங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

## ஆதவன் அறிமுக விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஜூன் 24

ஈழத்துச் சஞ்சிகைகளில் அறிவியல் கட்டுரைகளை மாத்திரம் பிரசுரிக்காமல் ஆக்க இலக்கியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதனல் புதிய நல்ல முறைகள் சமூகத்துக்குப் பயனுள்ள இலக்கியங்கள் படைக்க முடியும்.

ஆதவன், கல்வி, கலை இலக்கிய முத்திங்கள் சஞ்சிகை அறிமுகவிழா நல்லை ஆதீனமண்டபத்தில் நடைபெற்றது.

அறிமுக உரை நிகழ்த்திய எழுத்தாளர் சொக்கன் மேற்கண்டவாறு கூறினுர்.

வேலணை பெரும்பாக உத்தியோகத்தரும் தமிழ் விரிவுரையாளருமான திரு. என். குழந்தைவேலு வைபவங்களுக்கு தலைமை வகித்தார்.

திரு. சொக்கன் அங்கு தொடர்ந்து பேசுகையில் "ஆதவன் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் மக்களுக்கு மிகவும் பயன் உள்ளவை. குறிப்பாக மாணவ சமூகத்துக்குரிய கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

"ஜனரஞ்சகம் என்ற பெயரில் வர்த்தக நோக்கோடு இல்லாமல் சமூக மாற்றத்துக்குரிய பயனுள்ள ஆக்க இலக்கியங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்" என்ருர்.

புலவர் ஈழத்து சிவானந்தன் பேசுகையில் "நமது நாட்டில் சஞ்சிகை வெளியிடும் பணி மிகவும் கஷ்டமான ஒன்ருகும். இப்பணியில் துணிந்து இறங்கியிருக்கும் இளைஞர்களுக்குநாம் எல்லோரும் இயன்ற வரை ஊக்கமும் உற்சாகமும் கொடுக்க வேண்டும்" என்ருர்.

யாழ். பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு. நாகேஸ்வரன் பேசுகையில் "பரிசு பெற வேண்டும் என்பதற்காகவே நான் பல நூல்களை ஆராய்ச்சி செய்து கற்று பரிசுகளைப் பெற்றுள்ளேன். ஆனல் பரிசுகள் இன்று இல்லை. கற்ற அறிவு என்னுள்ளத்தில் நிறைந்து இருக்கின்றது" என்ருர். (இ-88)


வெளிவந்துவிட்டது:

**G. C. E. [ O/L ]**

**கேத்திரகணிதம்**

தொகுப்பு:
ஆசிரியர் T. தயாபரன் B.sc

குறிப்பு:
[1] July 88 மாணவருக்காக விசேடமாகத் தொகுக்கப்பட்டது.
[2] காரியாலயத்தில் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

முகவரி:

**PERSONAL CLASSES for MATHS**

No. 21, MANALTHARAI LANE,
KANTHARMADAM,
JAFFNA.
(4813)



### நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

எம்மிடம் 6000 சாக்குகள் வரை கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்ப முடிவுதிகதி 30-6-88. விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் 24-6-88 வரை பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
நல்லூர். ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
(C 5521)



## யாழ் குடாநாட்டின் குளங்களில் வண்டல் மண் அகற்றுதல்

மேற் கூறப்பட்ட திட்டம் (NORAD) நோருட் ஸ்தாபனத்தின் நிதியுதவியோடு ஊற்று ஸ்தாபனத்தால் அமுலாக்கப்படுகின்றது.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் 10 குளங்கள் இவ்வேலைத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும்.

குளங்களினல் பயனடைவோர் மத்தியிலுள்ள தொண்டர் ஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மற்றும் இளைஞர் அமைப்புக்கள் ஆகியோரை எம்முடன் உடனடியாக கடித மூலம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றேம்.

நீங்கள் பொறுப்பேற்கும் குளத்தின் விபரங்களும் உங்கள் ஸ்தாபனத்தின் விபரங்களும் தரப்படல் வேண்டும்.

காரியதரிசி
ஊற்று ஸ்தாபனம்,
117, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
(4524)



## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. க. செல்லையா
அதிபர் அவர்கள்

தோற்றம்: 05-12-1936 மறைவு: 24-06-1985

திதி: 19-07-1988

என் அருமைத் தெய்வமே
உங்கள் பிரிவு கண்டு
மூன்று ஆண்டு சென்றதையா
எங்கள் குடும்பம் இன்று
ஒளி இழந்த உலகம் ஐயா
தங்கள் செல்வக் குழந்தைகட்கு
அன்பைப் பகிர்ந்திடவும்
அறிவு வழி காட்டிடவும்
அப்பாவோ எங்கும் இல்லை...
இப்பாவி இவ்வுலகில்
இருக்கின்ற காலம் வரை
இன்ப நாள் என்றுமே கிடைக்காது
உங்கள் திரு நிழலும்
அன்பான வார்த்தைகளும்
எக்காலும் எம் முன்னல்
அழியாத ஜோதி ஐயா......
தங்கள் ஆத்ம சாந்திக்கு
இறைவனை வேண்டுகின்றேம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மகள்மார்,
உறவினர்.

'திருவேரம்'
ஆசிரியமணி செல்லையா வீதி,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
(4812)



## நன்றி நவிலல்

25-05-88 அன்று மறுமைக்குள் பிரவேசித்த திரு. இளையதம்பி உவோல்ரர் அழகரத்தினம் அவர்களின் நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியும் மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பல வழிகளில் உதவி நல்கிய உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேம். தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்ள இயலாமைக்கு வருந்துகின்றேம்.

குடும்பத்தினர்,

"மனேரம்மியம்"

21/1, இறக்காவீதி, சுண்டிக்குளி.
(4510)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

**பொருள்:**

தனக்கு அழிவே தருவதாக இருந்தாலும், அதற்காக அஞ்சி விட்டு விடாமல் தன் அரசனுக்கு நன்மை உண்டாகுமாறு செய்கின்றவனே தூதன்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

24-06-1988 த. பெ. இல. 23


## சூட்சும சமிக்ஞைகள்

மலையகத் தோட்டங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்பட வேண்டும். இப்படி ஒரு தீர்மானம் நாளை கொழும்பில் ஆரம்பமாகும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் வருடாந்த மாநாட்டில் கொண்டுவரப்பட உள்ளது.

தீர்மானம் நிறைவேற்றப்படும் என்பதில் சந்தேகமில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டுச் செயல்வடிவம் எடுப்பதிலும் தடங்கல் ஏதும் இருக்கமாட்டாது. ஏனெனில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் எதையும் செய்யும்— செய்விக்கும்— செல்வாக்குடைய ஒரு ஸ்தாபனம்.

சமய வழிபாட்டுக்காக ஆலயங்கள், விகாரைகள், தேவாலயங்கள் கட்டுவது சாதாரண விடயம். பெரும் விவகாரமாகவோ, பிரச்சினைக்குரியதாகவோ கருதப்பட வேண்டிய ஒன்றல்ல.

ஆனால் அவை எங்கு, எந்த உள்நோக்கத்துடன், எதற்காகக் கட்டப்படுகின்றன என்பதுதான் பிரச்சினைக்குரிய விவகாரமாக மாறும்.

மலையகத்தில் உள்ள தேயிலை, றப்பர் தோட்டங்களில் நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருபவர்கள் தமிழர்கள். (வாழ்ந்து வருபவர்கள் என்று சொல்வதைவிட, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகத் தம்மை மெழுகுதிரியாக்கி அர்ப்பணிப்பவர்கள் என்று சொல்ல வேண்டும்.)

அவர்களின் உழைப்பை, சேவையை மறந்த நன்றிகெட்ட தனத்தின் அத்தாட்சியாக, சிங்கள அரசுகள் மலையகத் தமிழர்களை நாடு கடத்த ஏற்பாடு செய்துவிட்டன.

அந்த அநியாயத்திலிருந்து தப்பி இங்கு தங்கியிருக்கும் மலையகத் தமிழர்களை, மனிதர்களாக, மனித உரிமைகள் உள்ள மக்களாக, சுதந்திரமுள்ள மக்களாக வாழவிடுவதற்கு தென்னிலங்கை வாழ் இன, மத தீவிரவாதிகளுக்கு விருப்பமில்லை.

அதன் முதல் பெறுபேறாக, ஆண்டுகள் பலவாகத் தேயிலை, றப்பர் தோட்டங்களாக இருந்து நிதிவளம் பெருக்கிய நிலங்கள், மாற்றுப்பயிர்த் திட்டம், கிராமிய புனரமைப்புத் திட்டம் என்ற பெயர்களில் சிங்கள மயப்படுத்தப்படுகின்றன. மலையகத் தமிழர்களை அவர்கள் பல பரம்பரையாக வாழ்ந்த இடங்களில் இருந்து குடிபெயரச் செய்யும் காரியங்கள் நடந்து வருகின்றன.

மலையகத் தமிழர்கள் ஒரே தொடர் நிலப்பரப்பில் குடியிருக்க விடலாகாது; உரிமை உள்ளவர்களாக வாழ அனுமதிக்கக் கூடாது; அவர்கள் தமக்கெனத் தனிக் கலாசாரம் பண்பாட்டை பேணி வளர்த்து வாழ இடங்கொடுத்தலாகாது என்ற பல வஞ்சக நோக்கங்களுடன் தான் மத்திய இலங்கையில் காரியங்கள் நடந்துவருகின்றன.

மலையகத் தமிழர்கள் வாழும் தோட்டங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்பட வேண்டும் என்பது மேற்கண்ட நோக்கங்களை தொனிப் பொருளாக — அடிப்படையாக — கொண்டதே!

ஸ்ரீலங்காவின் ஒவ்வொரு அங்குலமும் சிங்களப் பௌத்த நிலமாகத் திகழ வேண்டும் என்ற தீவிர வாதம் நிலவும் வரை, ஏனைய சிறுபான்மை இன மக்கள் இந்த நாட்டில் உரிமைகளுடன் வாழ முடியும் என்பதில் எள்ளளவும் நம்பிக்கை வைக்க முடியாது.

மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமை, வாக்குரிமை, அவர்களில் ஒரு சிலருக்குப் பதவிகள் என்ற ''கரட் தடி''யைக் காட்டி ''சூக்'' காட்டப்படுகிறது. மலையகத் தமிழர்களும் ஏமாற்றப்பட்டு, உலகமும் ஏமாற்றப்படுகிறது. தோட்டங்களில் விகாரைகள் என்பன போன்ற எண்ணங்கள் இன, மத வாதத்தின் உட்சூட்சுமங்களை வெளிப்படுத்தும் சமிக்ஞைகள். அவற்றின் ஆபத்தைத் தக்கபடி உணர்ந்து செயற்பட, மலையகத் தமிழர்கள் விழிப்படைய வேண்டும்.

### அச்சுவேலி விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில்

அச்சுவேலி, ஜூன் 24

அச்சுவேலி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவிலேயே ஆக [illegible] கூடுதலான விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

150க்கு மேற்பட்ட விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்திருப்பதாகவும் இது யாழ் மாவட்டத்தில் ஆகக் கூடிய எண்ணிக்கை என்வும் அச்சுவேலி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. என். [illegible] தெரிவித்தார். (...1.)

### பஸ் ஓடவில்லை

நெடுந்தீவு: ஜூன் 24

நெடுந்தீவில் சேவையில் உள்ள ஒரே ஒரு பஸ்வண்டியும் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து சேவையில் ஈடுபடமுடியாத நிலையில் உள்ளது. (இ-11.)

சோவியத்யூனியன்

# கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டின் போது ஆர்ப்பாட்டங்கள் நடத்த முஸ்தீபு!

மாஸ்கோ, ஜூன் 23

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு மாநாட்டின்போது ஆர்ப்பாட்டங்கள் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என்று மாஸ்கோ பொலீஸார் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அடுத்தவாரம் கிரெம்ளினில் கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு மாநாடு நடைபெற உள்ளது.

சோவியத்தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் சீர் திருத்தக்கொள்கைகள் அம்மாநாட்டில் கடுமையான விமர்சனத்துக்குள்ளாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மாநாடு நடைபெறும் போது மாஸ்கோவில் ஆர்ப்பாட்டங்களை நடத்த சில சக்திகள் முயற்சிப்பதாக மாஸ்கோ பொலீஸாருக்குத் தகவல்கள் கிடைத்துஉள்ளன,

யூதர்கள், ஆர்மேனியர்கள், ஜனநாயக நடவடிக்கைகள் அதிகமாக மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோருபவர்கள் ஆகியவர்களே இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்த முஸ்தீபு மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்த அனுமதியளிக்கப்படமாட்டாது; நடத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாஸ்கோ பொலீஸார் கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

## பனமாவுக்கு மேலும் அமெ. துருப்புக்கள்

வாஷிங்டன் ஜூன் 23

பனமாவுக்கு அமெரிக்கா மேலும் துருப்புக்களை அனுப்பிவைத்தது.

200 துருப்புக்கள் புதிதாக அனுப்பி வைக்கப்பட்டதாக வாஷிங்டனில் நேற்று அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில் நலன்களைப் பாதுகாக்க என ஏற்கனவே 10 ஆயிரம் துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

பனமாவின் இராணுவ தளபதி மனுவல் நொறியாகோவை பதவியில் இருந்து விலக்கும் நிர்ப்பந்த நடவடிக்கைகளில் ஒன்றாகவே அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. (எ)

### தீர்வுகாண உதவி

மாஸ்கோ, ஜூன்.23

கம்பூச்சியாவுடன் அமைதித் தீர்வு ஒன்றைக் காண வியட்னாமுக்கு உதவப்போவதாக சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது. (எ)

### அமெரிக்கா எச்சரிக்கை

இராணுவப்புரட்சி நடந்த ஹெய்டி தீவுக்குச் செல்ல வேண்டாம் என்று தனது பிரசைகளை அமெரிக்க அரசு எச்சரித்துள்ளது. (எ)

### இடதுசாரி முன்னணி

ஆந்திர மாநிலத்தில் ஜனதா, இந்திரா காங்கிரஸ் கட்சிகளுக்குப் போட்டியாக ஏனைய எதிர்க்கட்சிகள் சேர்ந்து இடதுசாரி முன்னணி ஒன்றை ஆரம்பித்து உள்ளது. (எ)

வெளி உலகில்

### கொலை முயற்சி குற்றச்சாட்டு

கபொரன், ஜூன்.23

கைது செய்யப்பட்ட இரண்டு தென் ஆபிரிக்கச் சிப்பாய்கள் மீது கொலை முயற்சிக் குற்றத்தை பொட்ஸ்வானா அரசு சுமத்தியுள்ளது.

இச்சிப்பாய்கள் பொட்ஸ்வானாவுக்குள் ஊடுருவல் செய்து பொட்ஸ்வானாப் பொலீஸாரைக் கொல்ல முயற்சித்த போது கைது செய்யப்பட்டனர் என்பதுதெரிந்ததே. (எ)

## ஆப்கன் கெரில்லாக்களிடம் சிக்கிய சோவியத் சிப்பாய்கள்

நியூயார்க் ஜூன் 23

சோவியத் யுத்தக் கைதிகளை விடுவிப்பது குறித்து சோவியத் அரசு ஆப்கன் கெரில்லாக்களுடன் நேரடியாகப் பேச வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஆப்கன் கெரில்லாத் தலைவர் அப்துல் ஹக் என்பவர் இதனை நியூயார்க்கில் வைத்துத் தெரிவித்தார்.

முந்நூறு சோவியத்சிப்பாய்கள் கைதிகளாக கெரில்லாக்களிடம் சிக்கி இருப்பதாகவும்,

அவர்களை விடுவிக்க ஐ. நா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சோவியத் வெளியுறவு அமைச்சர் ஐ. நா பொதுச் செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தப் பிரச்சனைக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐ.நா பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (எ)

## மத்திய கிழக்குப் பிரச்சினையில் முன்னேற்றமாம்

வாஷிங்டன், ஜூன் 23

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் தருணத்தில் இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சர் ரபின் அவசரப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வாஷிங்டன் செல்கிறார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை திரு. ரபின், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸைச் சந்திப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

இஸ்ரவேல் சுதந்திர நாடாக இயங்குவதை பலஸ்தீனியர் ஏற்றுக்கொள்வர் என்று கூறும் அறிக்கை ஒன்றை பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர் ஒருவர் அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இஸ்ரவேலிய அமைச்சரின் பயணம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. (எ)

## கண்ணீர்க்குண்டுப் பிரயோகத்தில் 40 பலஸ்தீனியர் உயிரிழந்தனர்!

### சர்வதேச மன்னிப்புச் சபை தகவல்

லண்டன் ஜூன் 23

கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகம் காரணமாக 40க்கு அதிகமான பலஸ்தீனியர் உயிரிழந்தனர் என்ற முறைப்பாடுபற்றி விசாரணை நடத்தும் படி சர்வதேச மன்னிப்புச்சபை இஸ்ரவேல் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

பலஸ்தீனரின் தாயகத்தை மீட்கும் கிளர்ச்சியை அடக்கும் இராணுவ நடவடிக்கைகளில் ஒன்றாக பாடசாலைகளிலும் வீடுகளினுள்ளும் இஸ்ரவேல் இராணுவம் கண்ணீர்க் குண்டுப் பிரயோகம் செய்து வருவதாக முறையிடப்பட்டுள்ளது.

அதில் பல குடிமக்கள் சிக்கி மூச்சுத்திணறி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்தே சர்வதேச மன்னிப்புச்சபை இஸ்ரவேல் அரசுக்கு விடுத்துள்ளது.

## கனடாவுக்கு சோவியத்பதிலடி!

மாஸ்கோ ஜூன் 23

கனடா இராஜதந்திரிகள் இரண்டுபேரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படி சோவியத்அரசு நேற்று உத்தரவிட்டது.

விடுமுறையில் சென்றிருந்த 3 கனடா ராஜதந்திரிகளை மாஸ்கோவுக்குத் திரும்ப வேண்டாம் என்றும் சோவியத்அரசு கேட்டுக்கொண்டது.

ஏழு சோவியத் ராஜதந்திரிகளை வெளியேற்றியதுடன் விடுமுறையில் மாஸ்கோ சென்றிருந்த 10 ராஜதந்திரிகளை திரும்பி வரவேண்டாம் என்று கனடா அரசு நேற்று முன்தினம் உத்தரவிட்டதைத்தொடர்ந்து சோவியத்அரசு இந்தப் பதில் நடவடிக்கையை எடுத்தது. (எ)

# தேர்தல் ஒரு கேலிக் கூத்து

## அன்னையர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24

சிவில் நிர்வாகம் சீர்குலைந்து போயுள்ளது. வடக்கு, கிழக்கில் ஜனநாயகம் நிலவவில்லை. குடிபெயர்ந்த தமிழ் மக்கள் தம் பாரம்பரிய இடங்களில் இன்னும் குடியமரவில்லை. இதற்கு மாறு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமே இலங்கை அரசால் நடத்தப்படுகின்றது. இந்த நிலையில் இங்கு தேர்தலை நடத்திவிட இந்திய, இலங்கை அரசுகள் முனைப்பாக நிற்கின்றன; இந்தக் குழப்பமான சூழ்நிலையில் தேர்தல் ஒரு கேலிக்கூத்தாகவே அமையும்.

யாழ் அன்னையர் முன்னணி பதில் தலைவி திருமதி ஆன் ஞானப்பிரகாசம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலையில் தமிழ்பேசும் மக்களுக்கு அவசியமானது தேர்தல் அல்ல. அமைதியே.

அமைதி ஏற்பட்டு அவர்களின் நீண்டநாள் அபிலாசைகள் நிறைவேறவேண்டும்.

இதற்குக் காலவரையறையற்ற போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். தமிழரின் உரிமைகள் அபிலாசைகள் நிறைவேற நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். முன்னேற்பாடாக வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு ஓர் இடைக்கால தமிழர் நிர்வாகம் அமைக்கப்படவேண்டும். அதன் பின்னர்தான் தேர்தலைப்பற்றிச் சிந்திக்கமுடியும்.

இதைத்தான் வடக்கு கிழக்குவாழ் தமிழ்பேசும் மக்கள் தமது சாத்வீக போராட்டங்கள் மூலம் வலியுறுத்தி வருகின்றார்கள்.

இதையே நாமும் ஏனைய பொதுநல அமைப்புகளும் இந்தியாவிடம் வலியுறுத்திவருகிறோம்.

போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஒத்துழைப்பு நல்க முன்வந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்தியா நேசக்கரம் நீட்டி, யுத்தத்தை நிறுத்தி, மனந்திறந்த பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.

தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குவதாக உறுதி அளித்த இந்தியா தமிழ் மக்களின் அபிலாசைகளை அலட்சியம் செய்யக்கூடாது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெற் காப்புறுதியில் அதிகளவு விவசாயிகளை ஈடுபடுத்த நடவடிக்கை

மானிப்பாய், ஜூன்.24

கடந்தகால போகத்தில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நெற்காப்புறுதியில் கூடியளவு விவசாயிகள் பங்குபெற முடியாமல் போய்விட்டது.

1988 - 89 காலபோகத்தில் சகலரும் பங்குபற்றக் கூடிய முறையில் எல்லாவித நடவடிக்கைகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ்ப்பாணம் - [illegible] மாவட்ட சமத்தொழில் காப்புறுதிச் சபை [illegible] தெரிவித்தார். (சி-90)

### இன்றைய கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்24

ஐக்கிய உள்ளூராட்சி ஊழியர் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை யாழ்- பொன்ட் பஸ்[illegible] நடைபெற உள்ளது.

காலை 10 மணிக்கு நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி ஊழியர் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும். (இ-9)

### ஸ்ரான்லி வீதியில் தரகர் தொல்லை

யாழ் ஸ்ரான்லி வீதியில் தரகர்களின் தொல்லை அதிகரித்து வருவதாகப் புகார் கூறப்படுகிறது.

பாவனையாளர்களும், [illegible] தரகர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சமய சந்நிதிகளில்

### மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம் ஜூன் 24

எழுதுமட்டுவாள் வடக்கு கலிபாணக் குளத்துப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோலம் நாளை சனிக்கிழமை அன்னதான அபிசேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற மணவாளக் கோல நிகழ்ச்சியின் போது ஆலயமணி புதிதாக அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

### ஸ்ரீ சித்திவிநாயகர் மகாகும்பாபிஷேகம்

நாவற்குழி, ஜூன் 24

நாவற்குழி ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோவில் மகாகும்பாபிஷேகக் கிரிகைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

தொடர்ந்து 4 நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் 10-55 மணிக்கும் இடையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். (சி)

### நவ நாள் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ் திருமுழுக்கு அருளப்பர் ஆலய நவநாள் பெருவிழா கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகியது.

பெருவிழா திருப்பலி இன்று வெள்ளிக்கிழமை காலை 6-15 மணியளவில் ஆலய முன்றலில் நடைபெறும்.

யாழ் ஆயர் அருள் திரு கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (இ)

லயன்ஸ் வழங்கியது:

## வறிய மாணவர்களுக்கு 2,000 பயிற்சிக் கொப்பிகள்

யாழ்ப்பாணம் ஜூன் 24

யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் யாழ் மத்திய கல்லூரி லியோக் கழகத்தினூடாக வறிய மாணவர்களுக்கு இரண்டாயிரம் பயிற்சிக் கொப்பிகளை வழங்கியுள்ளது.

யாழ். நல்லூர் தெற்கு சிறீ விக்னேஸ்வரா வித்தியாலயம், யாழ். நாவாந்துறை கத்தோலிக்க வித்தியாலயம், யாழ். சென்றேக் றேமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, யாழ். வண்ணை மேற்கு ஜி. எம். எம். ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கே மேற்படி பயிற்சி புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. (இ-5)

## வேம்படி 150 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ் வேம்படி மாளிர் கல்லூரி தனது 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் கொண்டாடுகிறது.

28 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு சுவாமி நாதபரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் யாகம் நடைபெறும்.

29 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு சர்வமதப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும். (இ)

## இப்படி இருக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 24

நேற்றைய உதயனில் 5 ஆம் பக்கத்தில் ''தற்போதைய நிலை நீடித்தால் ஸ்ரீலங்கா அரசுக்கே சாதகமாகிவிடும்'' என்ற தலைப்பில் வெளியான ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமாரின் பேச்சில் —

இந்தியா இங்கு வர வேண்டும் என விரும்பியவர்கள் தமிழ் மக்கள் என்ற வாசகம் —

''இந்தியா இங்கு வந்தபோது நாம் எதிர்ப்புக் காட்டவில்லை'' என அமைய வேண்டும்.

அதே போல,

நாம் உத்தியோக பூர்வமாக விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின்கையொப்பத்துடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்னும் ஒப்புதல் கடிதத்தை இந்திய அரசிடம் அனுப்பி வைத்தோம் என்ற வாசகம்—

''சென்னையில் பேசத் தயார் என்று டிசம்பரில் விடுதலைப் புலிகள் கூறினார்கள். அதை நாம் காவிச் சென்று கூறினோம்'' என அமைய வேண்டும். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






# உதயன்

24 - 06 - 1988 வெள்ளிக்கிழமை



★ மிளகாய்த் தூள்
மஞ்சள் தூள்
வீட்டுப் பாவனைக்குரிய முறையில் தயாரிக்கப்பட்டது
பாவனையாளர்,
மொத்த விற்பனையாளர்களுக்கு
விசேஷ கழிவுண்டு

அண்ணு தொழிலகம்
இணுவில்


## தமிழ் நாட்டு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி) யவருவதாவது:- கடந்த மே மாதம் 29 ஆம் திகதியும், அதற்கு சில நாட்களுக்கு முன்பும் இருவள்ளங்களில் முறையே 8 பேரும் 10 பேருமாக இராமேஸ்வரம், வேல்கோடு ஆகிய பகுதிகளில் இருந்து மீன் பிடிக்கச் சென்றனர்.

ஆனால் இது வரையில் அவர்கள் வீடு திரும்பவில்லை.

இந்த மீனவர்கள் யாழ் குடாவில் கரை ஒதுங்கியிருப்பதாக கிடைத்த சில ஊர்ஜிதமற்ற தகவல்களை அடுத்து அந்தப் பகுதி மீனவர் சங்கத் தலைவர்கள் இது பற்றி யாழ். அரசாங்க அதிபருக்கு அவசர தந்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

ஆனால் செயலக வட்டாரங்களில் இது பற்றி விசாரித்த போது. இது வரை அவ்வாறான மீனவர் எவரும் கரையை அடைந்ததாக அறிவிக்கப்படவில்லை என்றும் இந்த தந்தியை அடுத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-9)

## முல்லைத்---

(1ம் பக்கத் தொடர்ச்சி) கொண்டு பேச்சுவார்த்தையை உருவாக்கவேண்டும். வெலிஓயா சிங்களக் குடியேற்றம் அகற்றப்படவேண்டும். சிறையில் உள்ள கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த அடையாள உண்ணவிரதம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ - 5)

## மோதல்---

(1ம் பக்கத் தொடர்ச்சி) இருந்த விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை அமைதிப் படையினர் அழித்ததாகவும் தகவல்கள் வந்துள்ளன.

எனினும் ஊர்ஜிதமான விவரமான செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.

(அ-எ)

# அறிவுறுத்தல் கூட்டம் நாளை

## பரீட்சை உத்தியோகத்தருக்கு

யாழ்ப்பாணம், ஜுன்24

விசேட ஜீ. சி. ஈ. பரீட்சை உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கூட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

மேற்படி பரீட்சைக்கு மேற்பார்வையாளர்களாக, நிரந்தர நோக்குநர்களாக, இணைப்பதிகாரிகளாக, உதவி இணைப்பதிகாரிகளாக நியமிக்கப் பட்டுள்ளவர்கள் இந்தக் கூட்டத்தில் தவறுது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பிரதேசக்கல்விப் பணிப்பாளர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதே வேளை கிளிநொச்சி மாவட்டத்தில் பரீட்சை உத்தியோகத்தர்களாககடமையாற்ற உள்ளவர்களும்யாழ்இந்துமகளிர்கல்லூரிகூட்டத்தில் பங்குகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஒ-சு)

## கிளிநொச்சியில் வங்கிகள் இயங்கின

யாழ்ப்பாணம், ஜுன் 24

நேற்று முதல் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வங்கிகள் இயங்க ஆரம்பித்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகத் தடையானது கிளிநொச்சி மாவட்டத்துக்கும் விஸ்தரிக்கப்பட்டதை அடுத்தே வங்கிகள் இயங்குவது தடை செய்யப்பட்டிருந்தது.

ஆனல் தற்பொழுது இந்த சிவில் நிர்வாகத் தடையானது சிறிது தளர்த்தப்பட்டதை அடுத்து நேற்று மீண்டும் வங்கிகள் இயங்க ஆரம்பித்தன.

இதேவேளையில் கிளிநொச்சி மாவட்ட வங்கிகளும் இனிவரும் நாட்களில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஒ-9)

## அச்சுவேலியில் ஹர்த்தால்

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வடமராட்சியில் இந்திய அமைதிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது உயிர்நீத்த புத்தூர் கிழக்கைச் சேர்ந்த செ. ரஸ்வரஜீவாவின் (ரவாஸ்) 45ஆவது நாள் நினைவஞ்சலியை முன்னிட்டே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.(ஒ-11)

## ஆயுதக்---

(1ம் பக்கத் தொடர்ச்சி) கடைப்பிடிப்பது நியாய மற்றதும் அர்த்தமற்றதும் ஆகும்.

இன்றுள்ள நிலையில் அமைதியை உருவாக்குவதற்கு இந்தியா – தமிழீழ விடுதலைப் புலிகள் ஒப்பந்தம் ஒன்று முற்தேவையாகும்.

இன்றுள்ள நிலை தொடருமானல் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வு, அவர்களை மீளக்குடியமர்த்துதல் சேதமுற்ற கட்டடங்களைத்திருத்துதல்போன்ற பணிகளை உரிய முறையில் செய்ய முடியாதுபாகும். ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டிய அந்தப் பணிகள் தொடங்கப்படாமல் இருப்பது காலம் பிந்திய நிலையாகும்.

**மிகமோசமானநிலை**

தமிழருடைய இன்றைய நிலை முன்னர் என்றுமே இல்லாதவாறு மிகவும் மோசமடைந்துள்ளது. மக்கள் ஏமாற்றம் அடைந்தும் அதிருப்தி கொண்டும், மனநோவுடனும், பதற்றத்துடனும் வாழ்கிறுர்கள்.

இந்தியாவின் செயற்பாடுகள் தமிழர்களை இத்தகைய ஆபத்தான, சங்கடமான, சிக்கலான நிலைக்குத் தள்ளும் என எவரும் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

தமிழர்கள் என்றும் இந்தியாவை தங்கள் இரட்சகராக, பாதுகாவலராகவே கருதி வந்தார்கள். ஆனல் அந்த நம்பிக்கையை மீள ஊட்டுவதற்கு இந்தியா இனிமேல் நிறையப்பணியாற்ற வேண்டியுள்ளது.

பேச்சுவார்த்தை, அர்த்தமுள்ள உறுதியான அரசியல் அணுகுமுறை ஆகியவற்றின் மூலமே தமிழர்களுக்கு மீண்டும் நம்பிக்கையை ஊட்ட முடியும்.

எங்கள் மக்களை துன்பத்திலிருந்தும், வேதனையிலிருந்தும் சொல்லொணு இன்னல்களிலிருந்தும் காப்பாற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஏற்கனவே உருவாகியுள்ள வேண்டாத சூழ்நிலையை மேலும் மோசமடைய அனுமதிக்க வேண்டாம். அவ்வாறு செய்யின் அது அடக்குமுறையாக முடிந்துவிடும்.

[illegible] (அ-9)

## மன்னர் ..

(1ம் பக்கத்தொடர்ச்சி) பகுதி; உணவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் போன்ற சில பிரிவுகள் கடந்த வாரம் முதல் இயங்கி வருகின்றன.

திங்கள், வெள்ளி ஆகிய இரண்டு தினங்கள் தவிர்ந்த வாரத்தில் மூன்று தினங்களே இந்த அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்றன.

(ஒ-164)

## அநுரா-.

(1ம் பக்கத்தொடர்ச்சி) ப்பு, வன்செயல் நிறுத்தம்; இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துதல் ஆகியனவே அந்த நிபந்தனைகளாகும். ஆகவே இணைப்பு நிரந்தரமாகும் என்று கூறப்படுவது சரியல்ல.

இப்படி அமைச்சர் சொன்னர். (ஒ-எ)


இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச்

**சகாயநிதிச் சங்கம்**

**விசேட பொதுக் கூட்டம்**

26. 06. 88 ஞாயிறு காலை 8. 30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தவருது சமுகந் தருக.

க. கனகசிங்கம்,
செயலாளர்.

29, ஜும்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (C 5525)



வரையுள்ள
நெடுந்தீவு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நெடுந்தீவு
(யா. 1662 – 5-12-1979)

**வெற்றுச்சாக்கு விற்பனை**

தரம் பிரிக்கப்பட்ட சுமார் 2500 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு உண்டு.

முடிவு திகதி: **27-6-88 நண்பகல் 12மணி**

விண்ணப்பப் பத்திரம் : ரூபா 5/- செலுத்தி சங்கச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிப்பு வைப்புப் பணம் : ரூபா 300/-

விண்ணப்பங்கள் தலைவர், நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்திற்கு முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

27-06-88 பிற்பகல் ஒரு மணிக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும். கேள்விக்காரர் அவ்வேளையில் சமுகந்தரும்படி கேட்கப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்

வரையுள்ள
நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்
நெடுந்தீவு
1988-06-22 (C 5524)



**வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி**
**EXTERNAL UNIVERSITY STUDIES**
**கல்வியாண்டு 1989/90**

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
பட்டப்பாட நெறிகளான

**கலைமாணி [B. A.]**
**வணிகமாணி [B. Com.]**

**கல்வித்தகைமை:**
க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.

விரிவுரைகள் இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

1. **முழுநேர விரிவுரைகள் — திங்கள் முதல் வெள்ளி வரையிலான வார நாட்களில்.**
2. **பகுதிநேர விரிவுரைகள் — சனி, ஞாயிறு தினங்களில்**

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி :**
**25 - 07 - 1988**

**S. வரதராஜன் B. A. (Hons.)**
வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

கிளை நிறுவனம் :
**பொருளியல் கல்வி நிலையம்**
200, பிரதான வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)
(C 5527)



எமது நேற்றைய
புதிய வெளியீடு

சத்தியராஜ் - அம்பிகா

**"கனம் கோட்டார் அவர்களே"**
(ஒரிஜினல் பிரதி)

மணிவண்ணனுல் தொடுக்கப்பட்ட இந்த வழக்கு கனம் கோட்டாரினல் ஏற்கப்பட்டு, வாதப் பிரதிவாதங்கள் பரிசிலனை செய்யப்பட்டதா? வழங்கப்பட்ட தீர்ப்பு என்ன?

உங்கள்
றெக்கோடிங் ஓடர்களை
பதிவு செய்து கொள்ள
விரையுங்கள்

**குணம்**
**வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C 5528)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகரெட்ணம் சொக்கலிங்கம்

கந்தர்மடம் மணல் தறை ஒழுங்கை 43ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திருமதி நாகரெட்ணம் சொக்கலிங்கம் அவர்கள் 21-6-88 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார். அன்னர் காலஞ்சென்ற திரு.சொக்கலிங்கத்தின் அன்பு மனைவியும் சிவநாயகம் அருந்தவநாயகம், (A. I விவசாயக்கந்தோர்–வவுனியா) செல்வநாயகம், (பிறீமா மா ஆலை- திருகோணமலை) இராஜராசேஸ்வரி, புவனேஸ்வரி, பேரின்பநாயகம் (டென்மார்க்) ஆகியோரின் அருமைத் தாயாரும், கமலலோஜினி (விவசாயக் கந்தோர்- வவுனியா) இராஜகோபால் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜாந்தினி, சுஜேந்திரா ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை 25-6-88 அன்று காலை நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 10 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

தகவல்:
**Mr. S. சிவநாயகம்**

43, மடத்தலை லேன்,
கந்தர்மடம். ( 4835 )

## அம்பலவாணர் சிவகுருநாதன்

சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் அப்புக்காத்தாகக் கடமை புரிந்தவரும் ஆகிய அம்பலவாணர்- சிவகுருநாதன் 21-06-1988 அன்று காலமானர். இவர் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக்கணவரும் ஆனந்தவள்ளி, திலகவதி, தேவிபகவதி,நடேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரவணபவான், சிவப்பிரகாசம் ஆகியோரின் சகோதரரும் கருணுகரன் [பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை] சண்முகலிங்கம் (ரோஸ் பிறுண்ட்), சந்திரராஜ (மஸ்கன்) ஆகியோரின் மாமனும் ராமானுஜன், ராமினி, வாகினி, பிரதீபன், லோஜிதா, காண்டீபன், ராஜீவ், லாவினி, வனஜன், ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னரின் தகனக்கிரியைகள் 25-06-1988 அன்று காலை 10 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
**அ. நற்குணசேகரன்**

(4834)

# பிறந்த நாள் வாழ்த்து



கைதடி மேற்கைச் சேர்ந்த
**சிவராசா இராசலட்சுமி**
தம்பதிகளின் செல்வப் புதல்வி

**கனிஸ்கா**

தனது இரண்டாவது பிறந்த தினத்தை நாளை (25 – 06 – 88) சனிக்கிழமை கொண்டாடுகின்ருர். அவரை சகல செல்வங்களுடனும் நீடூழி வாழ்கவென பெற்ருேர் பாப்பா மாமா (டென்மார்க்) செல்லதுரை சித்தப்பா (டென்மார்க்) இராசலிங்கம் மாமா (சவூதி) மாமாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், சித்தப்பாமார் உறவினர்கள் வாழ்த்துகின்ருர்கள். (4534)


மஞ்சவனப்பதி

**முருகன் ஆலயம்**
கொக்குவில் மேற்கு

மேற்படி ஆலயத்திற்கு நித்திய நைமித்திய கருமங்களைச் செய்வதற்கு குருக்கள் தேவை.

வேதனம் மற்றும் விடயங்களை நேரில் பேசிக்கொள்ளலாம். விண்ணப்பம் 30- 6- 1988 க்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் முன்பு கருமமாற்றிய ஆலய விபரங்களையும் இணைக்கவும்.

கா. பாலசுப்பிரமணியம்
முகாமைத்துவ நம்பிக்கையாளரும் செயலாளரும்.

தர்மகர்த்தா சபை
மஞ்சவனப்பதி,
கொக்குவில்.

( 4826 )



இப்பத்திரிகை நியு உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 24 – 06 – 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna Friday 24 th June 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org